பெற்று பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது. ஒப்புதல்வாக்குமூலத்தை அச்சு எடுப்பதற்காக பிரிண்டர் எடுத்துவர செய்து எனது வாகனத்தில் வைத்து பிரிண்ட் அவுட் எடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி உள்ளிட்ட ஆவணங்கள் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நாள், நேரம் மற்றும் இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் அவர்களிடம் ஒப்புதல்வாக்குமூலம்எதுவும் பெறப்படவில்லை என்றாலும், பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(2வது எதிரி தரப்பில் 1வது எதிரி தரப்பின் குறுக்கு விசாரணை தனக்கானதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. )**

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.70/19 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.4 |
| Name: | தர்மலிங்கம் |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 02.08.2023. | |

**எதிரி மாதவன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் :

1. நான் தாயில்பட்டி வசந்தம் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த ஆறுமுகம் எனது மாமா ஆவார். கடந்த 2018 ம் வருடம் ஜனவரி மாதம் தேதி மாதம் தற்போது ஞாபகம் இல்லை, நான் சிவகாசியில் கொத்தனார் வேலை பார்த்து கொண்டிருந்த போது மதியம் 1.00 மணி அளவில் தங்கம் என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எனது மாமா ஆறுமுகத்திற்கு விபத்து ஏற்பட்டதாக கூறியதன் பேரில் நான் சிவகாசி அரசு

மருத்துவமனை சென்று பார்த்தேன். நான் போய் பார்த்த போது எனது மாமா ஆறுமுகத்திற்கு தலையில் அடிபட்டிருந்தது, இடது பக்க காதில் இரத்தம் வந்த நிலையில்இருந்தார், அவர் சுயநினைவின்றி காணப்பட்டார்.

2. சம்பவம் பற்றி நான் விசாரித்த போது எனது மாமா சைக்கிளில் மடத்துபடடி ரோட்டில் மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் வந்த TATA ACE வாகனம் எனது மாமாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாக தங்கம் என்னிடம் கூறினார். TATA ACE வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயர் எனக்கு தெரியாது. சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி அ.சா.1 மாரியம்மாள் புகார் வாக்குமூலம் கொடுத்தார். எனது மாமாவை சிவகாசியிலிருந்து மதுரை அரச மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள், அவர்கள் போகும் வழியில் திருமங்கலம் அருகில் எனது மாமா சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். அதன் பிறகு எனது மாமாவை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அங்கு வைத்து எனது மாமாவின் உடல் மீது பிரேத விசாரணை மேறகொண்டு பிரேத பரிசோதனைக்கு பின்பு நல்லடக்கம் செய்ய எங்களிடம் ஒப்படைபபு செய்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

வெம்பகோட்டை காவல்நிலையத்திலிருந்து சிவகாசி அரசு மருத்துவமனைக்குபோலீசார் ஒருவர்தான் வந்த எங்களை விசாரணை செய்தார்கள், அவரது பதவி என்ன என்று எனக்கு தெரியாது. அ.சா.1 மாரியம்மாள் கொடுத்த புகாரில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். போலீசார் விசாரணயிலும், முதல் விசாரணையிலும் சொன்னவாறும், நான் கேள்விபட்டவாறும் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால்

சரியல்ல. எனது மாமா சர்ச் தெருவிலிருந்து வடக்கிலிருந்து மேற்கே செல்வதற்காக சாலையை திடீரென்று வாகனம் வருவதை கவனிக்காமல் கடந்த போது நிலை தடுமாறி கீழே விழுந்தார் என்றால் சரியல்ல. TATA ACE வாகனத்திற்கம்,விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.70/19 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.3 |
| Name: | மாரிசெல்வம் |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 02.08.2023. | |

**எதிரி மாதவன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் :

1. நான் தாயில்பட்டி வசந்தம் நகரில்குடியிருந்து வருகிறேன். நான் தற்போது இ–சேவை மையம் வைத்து தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்த ஆறுமுகம் எனது தாத்தா ஆவார். அ.சா.1 மாரியம்மாள் எனது சித்தி ஆவார். கடந்த 19.01.2018 ம் தேதி மதியம் 12.30 மணி அளவில் நான் கிச்சப்பா தீப்பெட்டி ஆபிஸில் வேலை செய்து கொண்டிருந்த போது எனது சித்தி அ.சா.1 என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எனது தாத்தா ஆறுமுகத்திற்கு விபத்து ஏற்பட்டு விட்டதாக கூறியதன்

பேரில் நான் தாயில்பட்டி Well care மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்த்த போது எனது தாத்தாவிற்கு வலது கண்ணில் வீக்கம் இருந்தது, இடது காதில் இரத்தம் வந்த நிலையில் சுயநினைவு இன்றி காணப்பட்டார். சம்பவம் பற்றி எனது சித்தியிடம் கேட்ட போது எனது தாத்தா ஆறுமுகம் சைக்கிளில்மடத்து பட்டி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் அதே ரோட்டில் அதே திசையில் TATA ACE வாகனம் வேகமாக வந்து எனது தாத்தா மீதுமோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். TATA ACE வாகனத்தை ஓட்டிவந்த நபரின் பெயரை நான் கேட்கவில்லை, மகேந்திரன் என்று கேள்விபட்டேன். WEll care மருத்துவமனையில் எனது தாத்தாவிற்கு ஊசி போட்டு விட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிவகாசி அரசு மருத்துவமனையில் எனது தாத்தாவிற்கு முதலுதவி சிகிச்சை செய்தார்கள். சம்பவம்தொடர்பாக நடவடிக்கை எடுகக கோரி எனது சித்தி சிவகாசி அரசு மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் புகார்வாக்குமூலம் கொடுத்தார். சிவகாசி மருத்துவமனையிலிருந்து எனது தாத்தாவை மதுரை அரசு மருத்துவமனக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து சென்றோம். மதுரைக்கு போகும் வழியில் எனது தாத்தா சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். அதன் பின்னர் எனது தாத்தாவை சிவகாசி அரசு மருத்துவமனைக் கு அழைத்து வந்தோம். அங்குவைத்து எனது தாத்தாவின் உடல் மீது பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்கு பின் எனது தாத்தாவின் உடலை எங்களிடம்ஒப்படைப்பு செய்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

வெம்பகோட்டை காவல்நிலையத்திலிருந்து சிவகாசி அரசு

மருத்துவமனைக்குபோலீசார் ஒருவர்தான் வந்த எங்களை விசாரணை செய்தார்கள், அவரது பதவி என்ன என்று எனக்கு தெரியாது. அ.சா.1 மாரியம்மாள் கொடுத்த புகாரில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். போலீசார் விசாரணயிலும், முதல் விசாரணையிலும் சொன்னவாறும், நான் கேள்விபட்டவாறும் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா சர்ச் தெருவிலிருந்து வடக்கிலிருந்து மேற்கே செல்வதற்காக சாலையை திடீரென்று வாகனம் வருவதை கவனிக்காமல் கடந்த போது நிலை தடுமாறி கீழே விழுந்தார் என்றால் சரியல்ல. TATA ACE வாகனத்திற்கம்,விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.70/19 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.2 |
| Name: | முருகன் |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 02.08.2023. | |

**எதிரி மாதவன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் :

1. நான் தாயில்பட்டியில் உள்ள வசந்தம் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் குழாய் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 2018ம் வருடம் ஜனவரி மாதம் தேதி தற்போது ஞாபகம் இல்லை, மதியம் 12.15 மணி அளவில் நான் வேலை இல்லாமல் இருந்ததால் இசக்கி ஒர்க்ஸ் ஷாப்பில் உட்கார்ந்திருந்தேன். அந்த நேரத்தில் ஆறுமுகம் சைக்கிளில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி மடத்துபட்டி ரோட்டில் சென்று கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் Share auto வை மாதவன்

என்பவர் அதிவேகமாக ஓட்டி வந்து ஆறுமுகம் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். மாதவனை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் ஆஜர் எதிரிதான். ( சாட்சி எதிரி மாதவனை குறிப்பிட்டு அடையாளம் காட்டுகிறார்). நான் பார்த்த போது ஆறுமுகத்திற்கு தலையின் பின்பகுதியிலும், கண்ணிலும் அடிபட்டு சுயநினைவு இல்லாமல் இருந்தார். மாதவனின் ஆட்டோவில் ஆறுமுகத்தை அழைத்து சென்று அருகில் இருந்த பக்கத்தில் இருந்த கிருஷ்ணவேணி மருத்துவனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். அதன் பின்னர் ஆறுமுகத்தின் மகளான மாரியம்மாளுக்கு தகவல் சொன்னேன்.

2. அதன் பின்னர் மாரியம்மாள் மருத்துவமனைக்கு வந்தார். அதன் பின்னர் ஆறுமுகத்திற்கு ஊசி போட்டு விட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன் பின்னர் நான் மருத்துவமனையில் இருந்து விட்டேன், அவர்கள் சிவகாசி மருத்துவமனைக்கு சென்றார்கள். அதன் பின்னர் மாரியம்மாளிடம் போன் மூலம் கேட்ட போது மதுரைக்கு அழைத்து செல்வதாக சொன்னார். திருமங்கலம் அருகில் சென்று கொண்டிருந்த போது ஆறுமுகம் சிகிச்சை பலனின்றி இறந்த விபரத்தையும் சொன்னார். சம்பவம் குறித்து யார் புகார் அளித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. TATA ACE வாகனத்தின் பதிவு எண் தற்போது ஞாபகம் இல்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரைண செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** விபத்து நடைபெற்ற சாலை போக்குவரத்து அதிகமாக உள்ள சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையில் இருபுறங்களிலும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். வசந்தம் நகர் பஸ் ஸ்டாப் பாரதி கோழி கடை

அருகே ரோட்டின் தெற்கு புறம் உள்ளது. பாரதி கோழி கடை அருகில்தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட இடத்தில் இரத்தம் சிந்தி கிடந்தது என்றால் சரிதான். விபத்தில் மிதிவண்டிக்கு சேதம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனது மாமனார் ஓட்டி சென்ற மிதிவண்டியின் பின்னால் Share auto வின் வலது புறம் மோதியது. Auto மோதியவுடன் சைக்கிள் முன்னால் கிடந்தது, எனது மாமனார் அதற்கு பின்னால் கிடந்தார். Well care மருத்துவமனையின் ஆவணங்களை பார்த்தால் நான் எனது மாமனாரை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். எனது மாமனார் இறப்பிற்கு இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. Well care மருத்துவமனையிலிருந்து TATA Sumo வாகனத்தில் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள், நான் உடன் செல்லவில்லை. என்னை போலீசார் எனது வீட்டில் வைத்து சம்பவம் நடந்த 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். எனது மாமனாரை விபத்து நடந்த இடத்திலிருந்து தூக்கிய போது எனது சட்டையிலும் இரத்த கறை படிந்தது. எனது மாமனார் ஓட்டி சென்ற சைக்கிளை போலீசார் கைப்பற்றவில்லை, அது வீட்டில்தான் கிடக்கிறது. நான் சொன்ன நாள், நேரம் மற்றும் இடத்தில நான் இல்லை என்றாலும் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் விசாரணையிலும், முதல் விசாரணயிலும் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் மீது மோதிய வாகனம் வேகமாக வந்தது என்பதும் நான் அதை பார்த்தேன் என்பதும் பின்னால்நஷ்ட ஈடு வழக்கிற்கு ஆதரவாக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடம் அருகில் இசக்கி முத்து என்பவர் கடை இல்லை என்றாலும் நான் அங்கு

சம்பவத்தின் போது அமர்ந்திருக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது மாமனார் சர்ச் தெருவிலிருந்து வடக்கிலிருந்து மேற்கே செல்வதற்காக சாலையை திடீரென்று வாகனம் வருவதை கவனிக்காமல் கடந்த போது நிலை தடுமாறி கீழே விழுந்தார் என்றால் சரியல்ல. TATA ACE வாகனம் எனது மாமனார் மீது மோதவில்லை என்றால் சரியல்ல. விபத்து எனது மாமனாரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு காது சரியாக கேட்காது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.70/19 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.1 |
| Name: | மாரியம்மாள் |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 02.08.2023. | |

**எதிரி மாதவன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் :

1. நான் தாயில்பட்டி வசந்தம் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் அங்கன்வாடியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த ஆறுமுகம் எனது அப்பா ஆவார். கடந்த 19.01.2018 ம் தேதி மதியம் 12.30 மணி அளவில் நான் அங்கன்வாடியில் இருந்த போது எனது தங்கையின் மாப்பிள்ளை முருகன் என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எனது அப்பா ஆறுமுகத்திற்கு விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் அவரை Well care மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாகவும்

கூறினார். நான் உடனே Well care மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்த்த போது எனது அப்பா ஆறுமுகத்திற்கு வலது கண்ணில் அடிபட்டு வீங்கிய நிலையில் இருந்தது, வலது பக்க காதில் இரத்தம் வந்த நிலையில் காணப்பட்டார். அவர் மயக்க நிலையில் காணப்பட்டார்.

2. நான் சம்பவம் பற்றி முருகனிடம் விசாரித்த போது எனது அப்பா ஆறுமுகம் தாயில்பட்டியிலிருந்து மடத்துபட்டி செல்லும் ரோட்டில் மேற்கு நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்ததாகவும், அவருக்கு பின்னால் கனகவள்ளி என்று பெயரிடப்பட்ட TATA ACE வாகனத்தினை மாதவன் என்பவர் அதிவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து எனது அப்பா சென்ற சைக்கிளின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி நான் சிவகாசி அரசு மருத்துவமனையில் எனது அப்பாவுடன் இருந்த போது அங்கு வந்த போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.1/அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. Well care மருத்துவமனையிலிருந்து எனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக எனது அப்பாவை மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் திருமங்கலம் அருகே எனது அப்பா சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். மீண்டும் எனது அப்பாவை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து எனது அப்பாவின் உடல்மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு பின் நல்லடக்கம் செய்ய எங்களிடம் ஒப்படைப்பு செய்தார்கள். விபத்து ஏற்படுத்திய TATA ACE

வாகனத்தின் பதிவு எண் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வேலை செய்யும் அங்கன்வாடி தாயில்பட்டி, கட்டனஞ்சேவல் தெருவில் உள்ளது. சாட்சி முருகன் எனது தங்கை சந்திராவின் கணவர் ஆவார். எனது தங்கை சந்திராவின் வீடு தாயில்பட்டி – மடத்துபட்டி சாலையின் வடபுறம் உள்ள ஒரு கிறித்துவ தேவலாயத்தின் பின்புறம் உள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது தங்கையின் வீட்டிலிருந்து தென்வடல் தெரு வழியாகத்தான் தாயில்பட்டி – மடத்துபட்டி சாலைக்கு வரமுடியும் என்றால் சரிதான். எனது அப்பா சென்ற மிதிவண்டி பழைய மிதிவண்டி. விபத்தின் போது எனது அப்பாவிற்கு 82 வயது ஆகும். அப்போது எனது அப்பாவிற்கு காது கேட்கும் திறன் குறைவு என்றால் சரியல்ல, நன்றாக கேட்கும். எனது அப்பா மிதிவண்டியில் எந்த திசையில் சென்றார், எங்கே சென்றார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து நடைபெற்ற சாலையில் இருபுறமும் கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

2. எனது தகப்பனார் விபத்தில் இறந்தது தொடர்பாக இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். Well care மருத்துவமனையில் எனது தகப்பனாரை சுமார் 15 நிமிடங்கள் வைத்திருந்தோம். Well care மருத்துவமனையில் அப்போது மருத்துவர் மற்றும் செவிலியர்கள் இருந்தார்கள். Well care மருத்துவமனையிலிருந்து சிவகாசி அரசு மருத்துவமனைக்கு எனது அப்பாவை தனியார் காரில் கொண்டு சென்றோம். அந்த கார் யாருக்கு சொந்தமானது என்பது எனக்கு தெரியாது. அந்த காரை எனது அக்கா மகன் கொண்டு வந்தார். மருத்துவமனைக்கு யார் தகவல் சொல்லி போலீசார் வந்தார்கள் என்று

எனக்கு தெரியாது. Well care மருத்துவமனையிலிருந்து எனது அப்பாவை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு காரில் கொண்டு சென்ற போது காரில் நான், மாரிசெல்வம், தங்கம் ஆகியோர்கள் சென்றோம்.

3. சிவகாசி மருத்துவமனைக்கு போலீசார் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசாரிடம் கொடுத்த புகாரில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள், என்னுடன் இருந்த மற்ற நபர்களிடம் கையொப்பம் பெற்றார்களா என்று எனக்கு தெரியாது. புகார்வாக்குமூலம் மருத்துவமனைக்கு வெளியில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் என்னிடம் கையொப்பம் பெற்ற இடத்தில் அப்போது மருத்துவரோ, செவிலியரோ இல்லை. நான் சொன்ன நாள், நேரம், இடம் மற்றும் விதத்தில் புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முருகன் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு வரவில்லை, Well care மருத்துவமனைக்கு வந்தார்.

4. நான் கேள்விபட்டவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு செவி கேட்கும் திறன் இல்லாத காரணத்தினால், வாகனம் வருவதை கவனிக்காமல் சர்ச் தெருவிலிருந்து மடத்துபட்டிக்கு செல்வதற்காக தாயில்பட்டி – மடத்துபட்டி மெயின் ரோட்டில் திடீரென்று குறுக்காக கடந்த போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. TATA ACE வாகனம் எனது அப்பாவின் மீது மோதவில்லை என்றாலும் வயது முதிர்வின் காரணமாக எனது தகப்பனார் கீழே விழுந்து விட்டார் என்றால் சரியல்ல. TATA ACE வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஹாரன் அடித்து மெதுவாகத்தான் வந்தார் என்றாலும் அவர் அதிவேகமாவோ, கவனக்குறைவாகவோ வரவில்லை என்றாலும் எனது அப்பாவின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. விபத்து இழப்பீடு வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் அணிந்திருந்த சட்டையில் ரத்த கறை இருந்தது.